உள்ளுக்குள்ளே நெருப்பெரியும் - அட
உலகுக்கு எங்கே இது புரியும்
கரு வேங்கைகள் விடை பெறும் வேளையில் - நாம் படும்
வேதனை யாருக்கடா தெரியும்
ஆ.... வேதனை யாருக்கடா தெரியும்
உள்ளுக்குள்ளே நெருப்பெரியும் - அட
உலகுக்கு எங்கே இது புரியும்

இசை........

சரணம் 01

போய் வருகின்றோம் போய் வருகின்றோம்
என்று இவர் எம்மிடம் சொல்வார்கள்
இவர் பூ முகம் பார்த்து போய் வரச் சொல்வோம்
புன்னகையாலே கொல்வார்கள்

உள்ளுக்குள்ளே நெருப்பெரியும் - அட
உலகுக்கு எங்கே இது புரியும்

இசை........

சரணம் 02

பொத்தி பொத்தி கைகளில் இவரை பூவாய் வளர்க்கிறோம்
கரும்புலிகளுக்கு எங்கள் உயிரினை ஊட்டி புயலாய் வளர்க்கிறோம்
காலம் வரையில் தோல்களில் இவரை சுகமாய் சுமக்கிறோம்
காலம் வரையில் தோல்களில் இவரை சுகமாய் சுமக்கிறோம்
இவர் கைகளை ஆட்டி போன பின்னாலே மறைவாய் அழுகிறோம்

உள்ளுக்குள்ளே நெருப்பெரியும் - அட
உலகுக்கு எங்கே இது புரியும்

இசை........

சரணம் 03

உயிரினில் எழுதும் கவிதைகள் எனவே உறவினை வளர்ப்பார்கள்
இந்த உறவுகள் ஒரு நாள் விலகதும் இன்றி எரிந்திடப் போவார்கள்
பாட்டும் கூத்தும் பகிடியுமாக பால் குடி போல் இருப்பார்
பாட்டும் கூத்தும் பகிடியுமாக பால் குடி போல் இருப்பார்
பகை மீதினில் இவர்கள் மோதிடும் போதும் ஞானிகளாய் இருப்பார்

உள்ளுக்குள்ளே நெருப்பெரியும் - அட
உலகுக்கு எங்கே இது புரியும்

இசை........

சரணம் 04

வெடித்திடும் நாளை விரல்களில் எண்ணி கணக்கெடுத்து இருப்பார்கன்
இந்த வேளையும் பகைவர் மீதினில் எரியும் விருப்பினில் இருப்பார்கள்
அடிக்கடி எழுதும் வரிகளில் அண்ணன் முகத்தினை கேட்பார்கள்
அடிக்கடி எழுதும் வரிகளில் அண்ணன் முகத்தினை கேட்பார்கள்
வழி அனுப்பிடும் கடைசி நொடியினில் எங்கள் உயிரினில் பூப்பார்கள்

உள்ளுக்குள்ளே நெருப்பெரியும் - அட
உலகுக்கு எங்கே இது புரியும்
கரு வேங்கைகள் விடை பெறும் வேளையில் - நாம் படும்
வேதனை யாருக்கடா தெரியும்
ஆ.... வேதனை யாருக்கடா தெரியும்